Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 01 மார்கழி (02 - 12 - 1990) ஞாயிற்றுக்கிழமை ஓசை 277

## மலேரியா தடுப்பிற்கு முப்படை தலைமையகம் தடை

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கான மலேரியா தடுப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் சிறிலங்கா முக்கூட்டுப் படைகளின் தலைமை அலுவலகம் தடைசெய்துள்ளது. வடபகுதிக்கான மலேரியா தடுப்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் டி. டி. ரி, மலத்தியோன் போன்ற மருந்துப் பொருள்கள் வடபகுதிக்கு விநியோகிக்கப் படுவதை முக்கூட்டுப்படை (4ஆம் பக்கம் பார்க்க)

### திருமலை மாவட்டத்தில் சாம்பல்தீவு

# ராணுவத்தால் சுற்றிவளைப்பு

# மக்கள் வெளியேற்றப்பட்டனர்

(திருமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் தமிழ் கிராமங்களிலுள்ள வீடுகளில் எஞ்சி இருந்தோரையும் பலவந்தமாக வெளியேற்றும் முயற்சியில் சிறிலங்கா இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் வெளிப்பாடாக சாம்பல்தீவுப் பகுதியைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் அங்கு தங்கியிருந்த பொதுமக்கள் அனைவரையும் கைதுசெய்து வாகனங்களில் ஏற்றிச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, கடந்த புதன்கிழமை காலை 7 மணியளவில் சாம்பல்தீவுப் (4ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலை வேதங்கள் இன்று அறிமுக விழா

விடுதலைப் புலிகள் கலை, கலாசார பிரிவினர் தமிழீழக் கலைஞர்களுடன் இணைந்து உருவாக்கிய 'வேங்கைகளின் விடுதலை வேதங்கள்' என்ற பாடல் ஒலிப்பதிவு நாடாவின் அறிமுக விழா இன்று காலை பத்து மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறுகின்றது.

விடுதலைப் புலிகள் கலை, கலாசார பிரிவு பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரையின் தலைமையில் நிகழும் இவ் விழாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன் (4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாக் கடற் பகுதியில் கடற்படை சூட்டிற்கு இருவர் பலி

(குருநகர்)

யாழ்-குடாக்கடல் பகுதியில் சிறிலங்கா கடற்படையினரின் வெறியாட்டம் மீண்டும் தலை தூக்கியுள்ளது.

கடற்படையினரின் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த இருவர் பரிதாபமான முறையில் உயிரிழந்தனர்.

மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்-போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (4 ஆம் பக்கம் பார்க்க)

## வீர மரணம் யோகா

மாவிட்டபுரத்தில் இருந்து நேற்று முன்தினம் வெளியேற முயன்ற சிறிலங்கா இராணுவத்துடனான மோதல் சம்பவம் ஒன்றில் பெண் போராளி யோகா (தம்பித்துரை சிதாலட்சுமி, மயிலிட்டி) வீர மரணமடைந்தார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

## வீர தமிழ் வயோதிபர் நேற்று மரணமானார்

(நல்லூர்)

துப்பாக்கி முனையில் வவுனியாவுக்குச் செல்ல வழிகாட்டும்படி மிரட்டிய சிறிலங்கா சிப்பாயை சமயோசிதத்துடனும் துணிச்சலுடனும் மடக்கி வீரத்துடன் போராடி வெற்றி கண்ட வயோதிபர் அருணாசலம் (வயது 54) யாழ் ஆஸ்பத்திரியில் நேற்றுக் காலை மரணமானார்.

சிப்பாயை மடக்கும் முயற்சியில் கைக்குண்டு வெடித்த (4 ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குளம் முகாமினுள் மரக்கறித் தோட்டங்கள்

(நமது நிருபர்)

விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட மாங்குளம் இராணுவ முகாமில் தோட்டங்களும் காணப்படுகின்றன. இத்தத் தோட்டங்களில் வெண்டி, மிளகாய் போன்றவை பயிரிடப்பட்டுள்ளன. இந்த முகாம் நீண்ட காலமாக முற்றுகைக்குள்ளாகி இருந்தமையால் இராணுவத்தினரின் உணவுத் தேவைக்கென இத்தோட்டங்கள் உருவாக்கப்பட்டதாகத் தெரிகிறது.

அத்துடன் சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட மாமரங்களும் காணப்படுகின்றன. பசிலன் தாக்குதலினால் பலகாய்கள் உலிர்ந்து போனாலும் மாமரங்களில் இன்னும் நிறைய மாங்காய்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## இரத்ததானம் செய்ய வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனை இரத்தவங்கியில் இரத்தத்திற்குப் பெரும் பற்றாக்குறை நிலவுவதாகவும் மனிதநேயத்துடன் இரத்ததானம் செய்யும்படி தொண்டர் ஸ்தாபனங்களையும், பொதுமக்களையும் இந்த வைத்திய (4ஆம் பக்கம் பார்க்க)

## குறுகியகாலப் பாடத்திட்டத்தை உடன் அமுல்படுத்தவும்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கையால் விடுபட்ட பாடத்திட்டத்தை பூர்த்தி செய்ய வசதியாக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட குறுகிய காலப் பாடத்திட்டத்தை இதுவரை நடைமுறைப் படுத்தாத சகல பாடசாலைகளும் நாளை திங்கட்கிழமை முதல் அப்பாடத் திட்டத்தை உடனடியாக அமுல் படுத்துமாறு பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த விசேட பாடத்திட்டதை நிறைவு செய்வதற் (4ஆம் பக்கம் பார்க்க)

## வழமைபோல் விரிவுரைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விரிவுரைகள் நாளைமுதல் வழமைபோல் நடைபெறவுள்ளதாகத் தெரியவருகின்றது.

## தண்டவாளங்கள் பொதுமக்கள் பாவிப்பதற்குத் தடை

(நமது நிருபர்)

தண்டவாளங்கள், சிலிப்பர் கட்டைகள் ஆகியவற்றைப் பொதுமக்கள் எடுத்திருந்தால் அவற்றைப் பிரதேச அல்லது பிரிவுச் செயலகங்களில் ஒப்படைக்கும்படி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாவட்டச் செயலகம் கேட்டுக் கொண்டுள்ளது. இது குறித்து இச்செயலகம் விடுத்த அறிக்கையில் மேலும் எக்காரணம் கொண்டும் தண்டவாளங்கள், (4ஆம் பக்கம் பார்க்க)

### அளவெட்டி, திருநெல்வேலி பகுதிகளில்

## நேற்று விமானக் குண்டுவீச்சு; வயோதிப மாது பலி; வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதியில் சிறிலங்கா விமானப்படையின் தாக்குதலுக்கு அளவெட்டி, திருநெல்வேலி ஆகிய இரு இடங்கள் இலக்காகின. இந்த தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். பலர் காயமடைந்தனர். பல வீடுகள் சேதமடைந்தன. பல கால்நடைகளும் கொல்லப்பட்டன.

நேற்றுக்காலை 11 மணியளவில் அளவெட்டி கிராமத்தை வைரவர் கோயிலடியில் ஒரு விமானம் இரண்டுகுண்டுகளை வீசியது. இந்தத் தாக்குதலில் விசாலாட்சி (வயது 68) ஸ்தலத்திலேயே பலியானார். இந்த குண்டு வீச்சால் அருளானந்தம், சுப்பிரமணியம், அன்னலிங்கம் ஆகியோரின் வீடுகள் பலத்த சேதமடைந்தன.

திருநெல்வேலிப்பகுதியிலும் இதே நேரத்தில் ஒரு குண்டு வீச்சு விமானம் தாக்குதலை மேற்கொண்டது. இந்தக் குண்டுவீச்சால் முத்து சிவரட் (4ஆம் பக்கம் பார்க்க)

## மூதாட்டியின் தீரம்மிக்க செயல்; சிப்பாய் சுட்டுக்கொல்லப்பட்டார்!

(வவுனியா)

துப்பாக்கியுடன் வந்து உணவு தரும்படி மிரட்டிய சிறிலங்கா இராணுவச்சிப்பாயை தந்திரமான முறையில் வீட்டினுள் வைத்துப் பூட்டினார் ஒரு மூதாட்டி. இந்த மூதாட்டியின் தகவலை அடுத்து அங்கு விரைந்த விடுதலைப்புலிகள் சரணடையமறுத்த அந்தச் சிப்பாயை சுட்டுக்கொன்றனர். இச்சம்பவம் மன்னாகுளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் பற்றித்தெரியவருவதாவது: (4ஆம் பக்கம் பார்க்க)

## நாளை விசேட இணைப்பு

மாங்குளம் இராணுவ முகாமில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் கொண்ட விசேட இணைப்பு நாளை வெளிவரும்.

## வரிவிளம்பரம்

### விற்பனையாகின்றன

பாலர்தமிழ், பொதுஅறிவு மீரா வெளியீடுகள், மல்லிகைப் பந்தல் அஷ்டலக்ஷ்மி கலண்டர்கள் வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு பாலாஜி புத்தகசாலை, 15/6 முதலாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் (R/877)

### மரம் நடுவீர், மழை பெறுவீர்.

வாகை, மருது கன்றுகள் தேவைப்படும் தேவாலயங்கள் வாசிகசாலைகள் மற்றும் நிறுவனங்கள் எழுத்துமூலம் விண்ணப்பத்துடன் வந்து பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற் - யாழ்ப்பாணம் (B/ 1649)

### விற்பனைக்கு

நுளம்பைவிரட்டநீம் தூபம், எண்ணெய் ஸ்நானததிற்கு ஒலிவ் ஸ்நானப் பவுடர். மில்க்வைற் தயாரிப்புகள் இணுவில், திருநெல்வேலி, யாழ் ஆஸ்பத்திரி வீதி அண்ணா கோப்பி கடைகளிலும் விற்பனைக்கு உண்டு. மில்க்வைற் யாழ்ப்பாணம். (B/ 1650)

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) "மண்டேலா ரேடர்" இல 256 A பருத்தித்துறை வீதி நல்லூர். "அரஸ்ஜவுளியகம்" 146 நவீன சந்தை யாழ்ப்பாணம். (R/ 888)

### ஞானம்ஸ் ஸ்ருடியோ

காலை 9.00 மணி தொடக்கம் 1.00 மணி வரையும், கலர் பிலிம் றோல்கள் கழுவுதல், படங்கள்செய்தல், கறுப்பு வெள்ளை படங்கள் பிடித்தல் படங்களை பெரிதாக்குதல், புளொக் ஆகிய சேவைகளை தற்பொழுது வழங்குகின்றது என்பதை அறியத் தருகின்றோம். 301 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (B/1652)

### லைடன் ரெக்ஸ்ரையில்ஸ் சென்ரர்

மேற்படி ஸ்தாபனம் மீண்டும் முன்னைய பினான்ஸ் கம்பனிகட்டடத்தில்(249,மின்சார நிலைய வீதி) தமது விற்பனையை 5-11-90 முதல் ஆரம்பித்துள்ளதுடன் புதுவருடப் பண்டிகையை முன்னிட்டு மலிவு விற்பனையும் நடைபெறுகிறது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம். (B/1656)

**The Jaffna Education Center** யாழ்ப்பாணக் கல்வி நிலையம் (சாந்தி சினிமா முன்பாக மேல் மாடியில்) O/L. A/L Spoken English, Shorthand Typing இரு மொழிகளிலும் நடைபெறுகின்றன. பெண்களுக்கு விடுதி வசதியும் உண்டு. (B-1657)

### உதவிய நிறுவனங்களுக்கு நன்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தோன்றியுள்ள யுத்த நிலையால் பாதிக்கப்பட்டு யாழ். பல்கலைக்கழகத்தில் தங்கியிருந்து வசதிகள் எதுவுமின்றி அல்லல்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு தகுந்த நேரத்தில் உணவுப் பொருள்கள் மற்றும் பணம் என்பவற்றை வழங்கிய அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் அரச அதிகாரிகளுக்கும் திருக்கோணமலை, யாழ். பல்கலைக் கழக பட்டதாரி மாணவர்கள் சங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

---

## அறிவித்தல்

கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்த வேண்டியது கட்டாயமாகியுள்ளது; ஏனெனில் தகுந்த மருந்து வகைகளும், போதிய வைத்திய வசதிகளுமற்ற சூழ்நிலையில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து அவற்றால் கடிக்கப்பட்ட பல பொது மக்கள் அநியாய அவலச்சாவுக்கு இலக்காக நேர்ந்துள்ளது. எனவே அடையாளமற்ற நிலையில் அலைந்து திரியும் கட்டாக்காலி நாய்கள் 05-12-90 முதல் பிடிக்கப்படும். அவற்றை பிடித்துக் கொடுப்போருக்கு ரூபா5 சன்மானம் வழங்கப்படும்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி
(மாவட்டச்செயலகம்)

---

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 17 - 11 - 1902

உதிர்வு: 02 - 12 - 1984

### திரு. சின்னையா முத்துக்குமாரு அவர்கள்

(உரிமையாளர்: அம்பிகாபதி ரெக்ஸ்ரைல்ஸ்)

தாயினும் நல்ல தலைவனாய்!
தருமத்தின் திருவுருவாய்!
தரணியில் தயாளனாய்!
வாழ்வாங்கு வாழ்ந்து - எம்மை
ஆளாக்கி சீராக்கி வைத்த
எம்மருமை அப்பாவே!
நீங்கள் எம்மைப் பிரிந்து
ஆறாண்டு சென்றபோதும்
உம்பிரிவை எண்ணி - தினமும்
கண்ணீரால் அர்ச்சிக்கின்றோம்!
உன் இதயம் அமைதி கொள்ள
கண்ணகை அம்மன் அருள்வேண்டிப்
பாத பூசை செய்கின்றோம்!

"அம்பிகாபதி பான்ஷிகூட்ஸ்"
54, அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்

மக்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர்.
(B/1642)

---

## St. Patrick's College Jaffna

### பிரவேச விண்ணப்பம் - 1991

பின்வரும் வகுப்புகளுக்கு மாத்திரம் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

1ஆம் வருடம்: 01 - 02 - 1985 – 31 - 01 - 1986 உள் பிறந்திருக்கவேண்டும்.
4ஆம் வருடம்: 1982இல் பிறந்திருக்கவேண்டும்.
6ஆம் வருடம்: 1980இல் பிறந்திருக்கவேண்டும்
9ஆம் வருடம்: 1977இல் பிறந்திருக்கவேண்டும்.

- ☐ விண்ணப்பப் பத்திரம் ரூ. 30.00 (பரீட்சைக் கட்டணம் உட்பட)
- ☐ 3 - 12 - 1990 தொடக்கம் 20 - 12 - 1990 வரை பாடசாலை நாட்களில் கல்லூரிக் காரியாலயத்தில் காலையில் நேரில் வந்து கேட்பவருக்குக் கொடுக்கப்படும்.
- ☐ நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 28 - 12 - 1990 திகதிக்கு முன் கல்லூரிக் காரியாலயத்தில் காலை 9.00மணிதொடக்கம் 12மணிக்குள் நேரில் வந்து சமர்ப்பிக்கவும்.
- ☐ தபால்மூலம் வரும் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.
- ☐ பிரவேசப் பரீட்சைத்தினம் 07 - 01 - 1991 காலை 8.30 மணிக்கு.
- ☐ 6ஆம், 9ஆம் வருட வகுப்புகளுக்கு நடாத்தப்படும் பிரவேசப் பரீட்சையில் திறமை காண்பிக்கும் முதல் பத்து வீத மாணவர்களுக்கு கடந்தவருடம் போல் யாழ். ஆயரது புலமைப்பரிசில் வழங்கப்படும்.

— கல்லூரி அதிபர்

(B-1651)

---

## அறிவித்தல்

மட்டக்களப்பு பாடுமீன் கலைமன்றத்தினரால் 2-12-90 ஞாயிறு (இன்று) நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெற இருந்த போர்க்கால ராகங்கள் இசை நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தினால் 23-12-90 ஞாயிறு பிற்போடப்பட்டுள்ளது.

அ. அமிர்தராஜ்
தலைவர்
(பாடுமீன் கலை மன்றம்)

(R/ 890)

---

## வீரமரணம்



### வீர வேங்கை ரசிக்கா

(யாழினி சத்தியநாதன்)

மண்ணின் மடியில்: 30 - 09 - 1971

மண் மீட்பில் 23 - 11 - 1990

மாங்குளம் முதன்மை படைமுகாம் தகர்ப்பில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார்.

இவர் சத்தியநாதன் நாகரெத்தினம் (ஈஸ்வரி ஆசிரியை புனித பெனடிக்ற் வித்தியாலயம்) தம்பதிகளின் அன்புப் புதல்வியும் சுரேஸ் (பிரான்ஸ்) சுரேந்தினி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். இவரது இல்லத்தில் நிகழ்ந்த அஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது நன்றி

9/6, அகிலன் வீதி, (மலர் மகள் வீதி)
அரியாலை.

குடும்பத்தினர்.
(R/886)

---

## 45 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



முன்னாள் அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர்

### மேஜர் அன்ரனி

(கனகசூரியர் சிறி - கல்முனை)

மண் பார்க்க 24-09-64

மண் மீட்க 19-10-90

அன்று! ஒரு பூ உதிர்ந்ததுவே,
அன்ரனி என்று எங்கும்
தொனித்த அந்த புரட்சிப்பூவே!
வீறு கொண்டு எழுந்தே
பார் புகழும் வேங்கையாகி
வேராக எம்மோடு வாழ்ந்தவனே
பாரங்களைச் சுமந்தே நீயும்
தீரமுடன் களத்தினிலே போரிட்டே
வீரம் அது உந்தன் நிலைநிறுத்தினாயே!
தட்டிக் கேட்க யாருமில்லை என்றே
எட்டி வந்த எதிரிக்கூட்டமதை - அன்று
கெட்டித்தனமாய் நீயும் வெட்டி வீழ்த்தினாயே!
காக்க வந்த அந்நியர் எமை
தாக்க வந்த வேளையிலும், கூடவே வந்த
எட்டப்பர் கூட்டமவர் தம்
கொட்டமடக்கி ஓட்டமெடுக்க வைத்தவனே!
மீண்டும், எம் மண்ணில் இன்றைய இறுதிப்போரில்
நீயும் நின்றே உறுதியுடன் நேரில் மோதியே
எமையெல்லாம் விட்டுச்சென்றாயேன் பாதிவழிதனில்
தலைநிமிர்ந்தே மேதினில் நாம் வாழ்ந்திடவே
எரித்த இடத்தில் இருந்து நீ எழுந்து நிமிர்ந்து வா!

- உறவினர்

(B/1646)

## சிந்தனைக்கு

நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்:

- திருவள்ளுவர்


# ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 02-12-90
தொலைபேசி
ஆசிரியபீடம்:025-2839 நிர்வாகபீடம்:2208
த.பெ.எண் 05


# வேலிக்கு சாட்சியம் சொல்லும் ஓணான்கள்

இலங்கையில் நிகழும் மனித உரிமைகள் மீறல் தொடர்பான குற்றச்சாட்டுகளைப் பரிசிலனை செய்வதற்காக சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசவினால் விசேட ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. ஏழுபேரை உறுப்பினர்களாகக் கொண்ட இந்த ஆணைக்குழுவில் பிரேமதாசாவின் வெளிநாட்டு விவகார ஆலோசகரான பிரட்மன்வீரக்கோன், நிதி அமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் ஆகியோரும் அங்கம் வகிப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதில் முக்கிய விடயம் என்னவெனில் அரசாங்கம் மீதான குற்றச்சாட்டை விசாரிப்பதற்கு அரசைச் சார்ந்தவர்களே நியமிக்கப்பட்டுள்ளதாகும் பொதுவாக ஒரு அரசு மீதான குற்றச்சாட்டை விசாரிப்பதற்கு விசேட ஆணைக் குழுக்கள் நியமிக்கப்படும் போது ஓய்வு பெற்ற நீதிபதிகள் நியமிக்கப்படுவதே வழமையாகும். ஆனால் பிரேமதாசாவினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவில் இடம் பெற்றவர்களோசிறிலங்கா அரசினதும் பிரேமதாசாவின் தனிப்பட்ட நலனின்மீதும் நேரடியாக அக்கறை கொண்டவர்களாகும். அதாவது பிரட்மன்வீரக்கோன், பிரேமதாசாவின் வெளிநாட்டு விவகாரங்களுக்கான ஆலோசகர். அதாவது வெளிநாட்டு கொள்கை வகுப்பில் முக்கியமானவர்; பாஸ்கரலிங்கமோ முன்னர் பிரேமதாசா பிரதமராக இருந்த போது அவரின் செயலாளராக இருந்தவர் இன்று நிதித் துறையைக் கவனிப்பதற்காக பிரேமதாசாவினாலேயே நிதித்துறைச்செயலாளராக நியமிக்கப்பட்டவர் அவர் பிரேமதாசாவின் உள்விவகாரங்களில் – 'வீட்டு 'விவகாரங்களுக்குக்கூட- மிகவும் முக்கிய பங்குவகிப்பவர் ஆவார்.

இவ்வாறான இருவரை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளதனால் விசேட ஆணைக்குழு மனித உரிமைகள் பற்றிய விசாரணைகளை விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ளதா? மனித உரிமை மீறல்களுக்கு காரணம் கண்டுபிடிக்க அமைக்கப்பட்டுள்ளதா என்று எழுந்துள்ள கேள்வி - குற்றச்சாட்டு பொருத்தப்பாடு உடையதே.

இலங்கையில் இரண்டு தசாப்தங்களுக்கு முன் அவசர காலச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதிலிருந்தே பரவலாக மனித உரிமைகள் அரசாங்கத்தினால்மதிக்கப்படாமல்இருந்து வந்துள்ளது. அத்தோடு இராணுவத்தினருக்கு வழங்கப்பட்ட விசேட அதிகாரங்கள் மனித உரிமை மீறல்களை மேலும் அதிகரித்தது. இந்த இரு தசாப்தங்களிலும் அரசபயங்கரவாதத்தினால் ஏறத்தாழ ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். பல இலட்சக்கணக்கானோர் துன்புறுத்தப்பட்டுள்ளார்கள்.

ஆனால், இன்று திடீரென அரசாங்கத்திற்கு மனித உரிமைகள் மீறல் தொடர்பான விசாரணைகள் - கொலைகளுக்கான காரணம் கண்டுபிடித்தல் – அவசியம் தேவை ஆகின்றது. இன்று வளைகுடாவில் தோன்றியுள்ள நெருக்கடி நிலையும், தமிழருடனான யுத்தமும் பெருந்தொகையில் சிறிலங்காவிற்கு நிதிநெருக்கடியைத் தோற்றுவித்துள்ளன. இந்த நிலையில் இலங்கை மீதான மனித உரிமை ஸ்தாபனங்களின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் உதவி வழங்கும் நாடுகளின் கவனத்தை ஓரளவு ஈர்த்துள்ளன. இவற்றின் காரணமாகத் தான் சிறிலங்கா அரசு இன்று இலங்கையில் நடக்கும் மனித உரிமை மீறல்களுக்குக் காரணம் கூற வேண்டி உள்ளது.

இதற்காகவே இன்று படுகொலைகளுக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் காரணம் கண்டுபிடிக்க, மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டை பரிசீலிக்க விசேட ஆணைக்குழு என்ற போர்வையில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் பற்றி அரசாங்கம் விசாரணை மேற்கொள்வது குற்றவாளியே நீதிபதியாக இருப்பது போன்றதொரு நிலையே ஆகும். ஆகையினால் அரசாங்கத்தினால் மீறப்படும் மனித உரிமைகள் பற்றி அரச சார்பற்ற பொது நிறுவனங்களே விசாரணைகள் மேற்கொள்ளவேண்டும். அதிலும் குறிப்பாக சிறிலங்காவில் இன்று உள்ள தொண்டர் ஸ்தாபனங்கள், பொது ஸ்தாபனங்கள் யாவற்றிலும் சிங்கள இனவாதக் கருத்துக்கள் புகுந்து விட்டமையால் வடக்கு – கிழக்கில் இராணுவத்தால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களை விசாரிக்க சர்வதேச பொது ஸ்தாபனங்களே ஏற்புடையனவையாகும்.

உண்மையில் சிறிலங்கா அரசாங்கம் மனித உரிமைகள் மீறல்கள் இடம் பெறுவதைத் தடுக்க விரும்பின் அல்லது அவற்றைப்பற்றி விசாரிக்க விரும்பின் அவசரகாலச் சட்டத்தையும், பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற இராணுவத்தினருக்கு விசேட அதிகாரங்களை வழங்கும் சட்டங்களையும் ரத்துச் செய்வதோடு, சட்டபூர்வமற்ற அதேவேளை அரசாங்கத்தால் கட்சி ரீதியாகவும், இன ரீதியாகவும் வழங்கப்பட்ட ஆயுதங்களையும் திரும்பப் பெறுமாயின் மனித உரிமை மீறல்கள் பற்றி அரசாங்கம் விசாரணை செய்ய வேண்டிய அவசியம் இருக்காது.

கரிகாலனின்லாண்ட்குறோசர் கொக்கட்டிச்சோலையை சென்றடைந்தது. அங்குள்ள தேவாலயத்தின் முன்றலிலே தான் கூட்டம் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. ஆயிரக்கணக்கான மக்கள் இக் கூட்டத்திற்காக வருகை தந்திருந்தனர். திரு தம்பிராசா அவர்கள் தலை

**28**

மையில் கூட்டம் ஆரம்பமாகியது. உரை நிகழ்த்தியவர்களில்அனேகர்குமரப்பாவையே ஞாபகப்படுத்தினர். ஏனெனில் அந்தக் கிராமத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் குமரப்பாவைத் தெரியும்.

போராட்டத்தின் வளர்ச்சியைக் காட்டுகின்றது. தமிழீழத்தை மீட்டெடுக்கும் படிக்கற்கள்இச்சாதனைகள்' என்று பேசினார்.

அடுத்து திரு.நியூட்டன்பேசினார். மட்டக்களப்பு அம்பாறைமாவட்டங்களில்உள்ள சிரேஷ்ட போராளிகளில் ஒருவர் இவர். 1985 ஆம் ஆண்டு மட்டக்களப்புக்குச் சென்ற இவர் தொடர்ச்சியாக அப் பகுதியிலேயே விடுதலைக்காக தீவிரமாக உழைத்துவருபவர்.

"குமரப்பா, புலேந்திரன் ஆகியோரின் மரணம் இயக்கத்தின் தன்மானத்திற்கு எடுத்துக்காட்டு. அவர்கள்பிடிபடும் போது ஆயுதம் இருந்தது. சயனைட் இருந்தது. அவர்கள் அப்போதே சண்டை பிடித்திருக்கலாம். சயனைட் அருந்தியிருக்கலாம். ஆனால்

மட்டக்களப்பிலும் ஏற்பட்டது.

நாளை, வியட்னாம் நிலைமை போல இங்கும் உருவாகலாம். நாளாந்த வேலைகளைக்கவனித்துக் கொண்டு இருப்பார்கள் மக்கள்: இராணுவம் வந்தவுடன் சண்டை செய்வார்கள். பின்னர் தங்கள் வேலைகளைக் கவனிப்பார்கள். அந்த நிலைக்கு மக்கள் தயாராக வேண்டும். என்று பேசினார்.

கூட்டம் முடிந்து வெளியே வந்தபோது எனக்கு வியப்பாக இருந்தது. இவ்வளவு இராணுவ அட்டூழியங்களுக்குப் பின்னரும் எதற்கும் அஞ்சாமல் இவ்வளவு பேர் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறார்களே என்று. போராளிகளுடன் மிகவும் அன்னியோன்னியமாக நடந்து கொண்டார்கள் மக்கள்.

## உதிக்கும் திசை நோக்கி உன்னத பயணம்...



திரு. கரிகாலன் அவர்கள் உரையாற்றும்போது "இன்றையநாள் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் திருப்புமுனையை ஏற்படுத்திய நாள். இந்திய ஒப்பந்தத்தின் பெயரால் இந்திய வல்லாதிக்க பூதம் எம்மை படுகொலை செய்த நாள்" என்று குறிப்பிட்டு இந்திய அரசின் தந்திரங்களுக்கு பலியாகாமல் எவ்வாறு போராட்டத்தை புலி

அவர்கள் தம்மை இந்திய அரசு காப்பாற்றுமென நம்பினர். கடைசியில் இந்தியாவின் நம்பிக்கைத் துரோகத்தினாலேயே அவர்கள் சயனைட் அருந்த நேரிட்டது. பிற்பகல் 5 மணிக்கு சாகப் போகிறோம் என்பது நண்பகல் 12 மணிக்கே அவர்களுக்குத் தெரியும். எமதுபிராந்தியத்தளபதிகள் எதிரியின் முன்னால் கைகட்டி நின்று மறுமொழி

அங்கிருந்து புறப்பட்டோம். மகிழடித்தீவுச் சந்தியை அடைந்தோம். ஏற்கெனவே எனக்குப் பழக்கமான பலர் அங்கே காணப்பட்டனர். அவர்களில் கணிசமானோர் எழுவான்கரைக் கிராமமான ஆரைப்பற்றை என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள். சூரியன் உதிக்கும் திசையில் உள்ள கிராமங்கள் எழுவான்கரை என அழைக்கப்படும். கடலுக்

> தமிழீழப் போராட்டத்தில் எதிரிகளிடமிருந்து பெறப்பட்ட ஆயுதங்களில் கூடுதலான ஆயுதங்கள் மட்டக்களப்பு பிராந்தியத்திலேயே பெறப்பட்டவை. இன்று கோட்டையில் புலிக்கொடி பறக்கின்றதென்றால் அதற்கு மட்டக்களப்புப் போராளிகளும் கணிசமான பங்காளிகள். கோட்டையை மீட்டெடுக்க உதவிய ஆயுதங்களில் கணிசமானவை மட்டக்களப்பில் பெறப்பட்டவைதான்.
>
> - நியூட்டன்



கள் முன்னெடுத்துச் சென்றனர் என்பதை விளக்கினார். தொடர்ந்து தற்போதைய நிலைபற்றி அவர் பேசுகையில்' மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் ஒரே நேரத்தில் 11 பொலிஸ்நிலையங்களையும் 7 இராணுவ முகாம்களையும் தாக்கி வெற்றி பெறும் அளவுக்கு போராட்டத்தில் வளர்ச்சியடைந்துள்ளோம். போராட்டத்திற்கு மக்கள் அளித்த ஒத்துழைப்பே இச்சாதனைகளுக்கு மூலகாரணம். எனவே சிறிலங்கா அரசு பெருமளவில் இராணுவத்தை குவித்துமக்களைப்படுகொலை செய்து அகதிகளாக அலையச் செய்வதன்மூலம் மக்களை எம்மிடமிருந்து அன்னியப்படுத்தி போராட்டத்தை முறியடிக்கலாம் எனக்கனவுகாண்கிறது. ஆதலால் நாம் எந்தச்சூழ்நிலையிலும் வாழப்பழகிக் கொள்ள வேண்டும்.

இந்திய இராணுவத்துடன் நாம் நடத்திய போரில் 2000 சிப்பாய் வரையில் கொல்லப்பட்டுள்ளனர். தற்போதைய போரில் 1500 சிறிலங்கா இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர். இரண்டாயிரம் பேர் கால்களை இழந்துள்ளனர். இந்நிகழ்வுகளெல்லாம்

சொல்லக் கூடாது என்பதற்காகவே சயனைட் அருந்தினார்கள் அந்த குமரப்பா வளர்த்த போராளிகளே இன்று மட்டக்களப்பில் பெரிய பொறுப்புகளில் இருக்கிறார்கள்.

இன்று கோட்டையில் புலிக்கொடிபறக்கிறது, யாழ்ப்பாணம் மாதிரி இங்கு ஏன் கொண்டுவர முடியாது? என சிலர் கருதலாம். அங்குள்ள புவியியல் நிலைமை வேறு இங்குள்ள நிலைமை வேறு. மட்டக்களப்பு போராளிகள் போராடத் தெரியாதவர்கள் அல்ல. உண்மையில் தமிழீழப் போராட்டத்தில் மட்டக்களப்பிலேயே கூடுதலான ஆயுதங்கள் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டன. இன்று கோட்டையில் புலிக்கொடி பறக்கின்றதென்றால் மட்டக்களப்புப் போராளிகளும் தான் அதில் பங்காளிகள். அவர்களும் அங்கு போராடியிருக்கிறார்கள். கோட்டையை மீட்டெடுக்க உதவிய ஆயுதங்களில் கணிசமானவை மட்டக்களப்பில் பெறப்பட்டவைதான்.

வெள்ளம் வராமல் ஒரு அணைக்கட்டை கட்டுகிறோம் அந்த அணைக்கட்டில் ஒரு இடத்தில் வெடிப்பு ஏற்பட்டால் பிறகு ஒன்றும் செய்ய முடியாமல் போய்விடும். அதே போன்ற நிலைமைதான்

கும் வாவிக்கும் இடையில் உள்ள கிராமங்கள் இவை. சூரியன் மறையும் திசையில் உள்ள கிராமங்கள் படுவான் கரை என அழைக்கப்படும். வாவிக்கு மேற்குப் பக்கமாக உள்ள கிராமங்கள் இவை. ஆரைப்பற்றை கிராமத்தில் இராணுவமுகாம் இருப்பதால் பெரும்பாலான ஆண்கள் ஆற்றைக் கடந்து படுவான் கரைக்கு வந்துள்ளனர். ஆற்றுக்கு அப்பால் மனைவி, குழந்தைகள். இவர்கள் ஆற்றங்கரையை அண்டிய மகிழடித்தீவுச் சந்தியில், அனைவரும் ஆற்றங்கரையையே வெறித்துப்பார்த்துக் கொண்டிருந்தனர். குடும்பங்கள் சிதறிய நிலையில் அவர்கள்.

நாங்களும் ஆற்றங்கரைக்குச் சென்றோம். சாதாரணமாக எப்போதும் ஐந்து தோணிகளாவது ஆற்றில் தென்படும். சிலர் மீன் பிடித்துக்கொண்டிருப்பர். எழுவான் கரைக்கும் படுவான் கரைக்குமிடையில் போக்குவரத்து நடந்துகொண்டிருக்கும். ஆனால் இப்போதோ எவருமே காணப்படவில்லை. ஆற்றைப் பார்த்தேன். ஓடிக்கொண்டிருந்தது தண்ணீராகத் தெரியவில்லை. பிரிந்திருக்கும் குடும்பத்தினரின் கண்ணீராகவே எனக்குத் தெரிந்தது.

(தொடரும்)

# வளைகுடாவில் பதற்றத்தைதவிர்க்க ஈராக்குடன் பேசுவதற்குத் தயார்

## - ஜோர்ஜ் புஷ்

(வாஷிங்டன்)

வளைகுடாவில் நிலவும் பதற்றத்தை தவிர்க்க ஈராக்குடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்த தாம் தயாராக உள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் அறிவித்துள்ளார்.

ஐ நா பாதுகாப்புச் சபையில் ஈராக்கிற்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அறிவிக்கப்பட்ட 12 மணித்தியாலத்திற்குப் பின்னர் அமெரிக்க ஜனாதிபதியினால் இந்த அறிவிப்பு நாடுதழுவிய ரீதியில் அறிவிக்கப் பட்டது.

அடுத்தமாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் குவைத்தில் இருக்கும் ஈராக்கிய படைகள் நிபந்தனையின்றி வெளியேற வேண்டும் எனவும், வெளியேறத்தவறினால் ஈராக்மீது ஆக்கிரமிப்பு நடத்தலாம் என்றும் ஐ நா.பாதுகாப்புச் சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது தெரிந்ததே.

ஆனால் ஈராக் அரசாங்கம் அமைதியானமுறையில்இந்தப் பிரச்சினையைதீர்க்க அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்திருந்தது. இதனை அமெரிக்கா முதலில் மறுத்திருந்தபோதும் இப்போது சம்மதம் தெரிவித்துள்ளதோடு இந்த மாத நடுப்பகுதியில்ஈராக்கியவெளியுறவு அமைச்சர் தாரிக் அசிஸை அமெரிக்காவிற்கு வருமாறும் அழைப்பு விடுத்துள்ளார்.

அதேபோலவே அமைதிவழியில் தீர்வுகாணும் முகமாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ்பேகரை ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனுடன் பேச்சுவார்த்தை நடத்த பாக்தாத்துக்கு அனுப்ப ஜோர்ஜ்புஷ் முன்வந்துள்ளார்.

''பேச்சு வார்த்தை நடத்த அமெரிக்கா முன்வந்திருப்பது என்பது ஈராக்கிற்கு அளிக்கப்படும் சலுகையாகக் கருதக் கூடாது என்றும் அது வளைகுடாப் பிரச்சினை குறித்து அமெரிக்காவின் சமாதான முயற்சியையே காட்டுகின்றது'' என ஜோர்ஜ்புஷ் அறிவித்துள்ளார்.

இதேவேளை ஈராக் அமெரிக்காவின் இந்த அறிவிப்பினை ஆச்சரியத்துடன் வரவேற்றுள்ளது. இது தொடர்பாக ஆலோசனை நடத்துவதற்காக அதிகாரிகள் மட்டத்தில் கூட்டமும் நடைபெற்றதாக கூறப்படுகிறது.

### பேச்சுவார்த்தைக்கு ஈராக் தயார்

(பாக்தாத்)

வளைகுடாப் பிரச்சினைக்கு நேரடிப் பேச்சுவார்த்தை நடாத்த முன் வருமாறு அமெரிக்கா விடுத்த யோசனையை ஈராக் ஏற்றுக்கொண்டுள்ளது ஈராக்கின் வெளியுறவு அமைச்சர் தாரிக்-அல்-வசிர் வாஷிங்டன் செல்வார் எனத் தெரிய வருகின்றது. அமெரிக்காவின் வெளியுறவுச் செயலர் ஜேம்ஸ் பேக்கர் பாக்தாத் செல்லவிருப்பதாக முன்னரே அறிவித்திருந்தார்.

**மூதாட்டியின்**

மாங்குளம் இராணுவ முகாம் தாக்குதலையடுத்து வவுனியாக் காடுகளில் உதிரி உதிரியாக திரியும் இராணுவச் சிப்பாய்களில் ஒருவர் ஏ. கே. எல். எம். ஜி. துப்பாக்கியுடன் மன்னா குளம் பகுதிக்கு வந்தார். அங்குள்ள ஒரு வீட்டின் சமையலறைக்குள் திடீரெனப் புகுந்த அவர் அந்த வீட்டில் தனிமையில் இருந்த மூதாட்டியிடம் உடனடியாக சமையல் செய்து தனக்கு உணவு தர வேண்டும் என்று பயமுறுத்தினார். சிப்பாயின் மிரட்டலுக்குப் பயப்படுவது போல் நடித்த மூதாட்டி அவனுடன் பேச்சுக் கொடுத்தவாறே அவனை உள்ளே வைத்துக் கதவைப் பூட்டினார். பூட்டிய வேகத்தில் விடுதலைப்புலிகளிடம் தகவலைக் கூறினார்.

உடனே அப்பகுதிக்கு விரைந்த விடுதலைப் புலிகள் அந்தச் சிப்பாயை சரணடையும்படிகூறினர். ஆனால் அவர் சரணடைய மறுத்து விடுதலைப் புலிகளை நோக்கித் துப்பாக்கியைத் திருப்பினார். உடனே விடுதலைப்புலிகள் அந்தச்சிப்பாயைச் சுட்டுக் கொன்று அவரது ஏ.கே.எல். எம்.ஜி. துப்பாக்கியைக் கைப்பற்றினர்.

இராணுவத்தினரின் மிரட்டலுக்கு அஞ்சாமல் துணிச்சலோடும், தந்திரத்துடனும் செயற்பட்ட அந்த மூதாட்டியைக் கிராமவாசிகள் பலரும் பாராட்டிச்சென்றனர்.

**இரத்ததானம்**

சாலையின் வைத்திய அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குறிப்பாக ''ஓ'' பொசிற்றிவ், 'ஓ'நெக்கற்றிவ் போன்ற இரத்தவகைகள் மூற்றாகத் தீர்ந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. தொடர்ச்சியாக இரத்தத்தின் தேவை இருந்துவருவதால் இரத்த தானத்திற்கு தொடர்ந்தும் தொண்டர் ஸ்தாபனங்கள் முன்வரவேண்டும் என்றும் இரத்தவங்கி வைத்திய அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க)

# கட்டுவனில் வெளியேற முயன்ற இராணுவம் - புலிகள் மோதல்

(தெல்லிப்பளை)

நேற்று நண்பகல் 12 30 மணியளவில் கட்டுவன் சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து தென்மேற்குப் பகுதி ஊடாக மல்லாகம் பகுதியை நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே கடும்மோதல் இடம்பெற்றது.

சுமார் 30 நிமிடங்கள் வரை நடைபெற்ற மோதலையடுத்துத் தொடர்ந்து முன்னேற முடியாத இராணுவத்தினர் முகாம் திரும்பினர். இதனைத் தொடர்ந்து அப்பகுதிக்கு வந்த ஹெலி ஒன்று கட்டுவன், வறுத்தலைவிளான் குரும்பசிட்டிப் பகுதிகளை நோக்கித் தொடர்ச்சியான கலிபர் தாக்குதலை மேற்கொண்டது. அதேவேளை பலாலி முகாமிலிருந்து இப்பகுதிகளை நோக்கித் தொடர்ச்சியான ஷெல்தாக்குதல்மேற்கொள்ளப்பட்டது.

மாலை 4.45 மணிக்கு இதே பகுதியூடாக வெளியேற முற்பட்ட இராணுவத்தினரை நோக்கி விடுதலைப் புலிகள் கடும்தாக்குதலை மேற்கொண்டதைத் தொடர்ந்து அவர்கள் தமது முயற்சியைக் கைவிட்டு முகாமிற்குள் முடங்கினர்.

இத்தாக்குதல்கள் தொடர்பாக ஏற்பட்ட சேதவிபரங்கள் எதுவும் தெரியவில்லை.

**மலேரியா**

களின் தலைமை அலுவலகம் தடுத்துள்ளது. இதனால் மலேரியா தடுப்பு மற்றும் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் வடபகுதியில் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

கடந்தசில மாதங்களாகஇப் பகுதியில் கையிருப்பிலிருந்த சிறிதளவு மருந்துப்பொருள்களை வைத்துக்கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. தற்போது அவை தீர்ந்துவிட்டதால் மலேரியா தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் இப்போது மேற்கொள்ளப்படுவதில்லை.

இதனால் வடபகுதியில் மலேரியா நோய் வேகமாக பரவி பெரியளவிலான உயிர்ச் சேதங்களை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது. (க)

**யாழ். குடா**

இச்சம்பவம் நேற்று அதிகாலை 3-30 மணியளவில் மண்டைதீவு, குறுக்கல் என்னும் இடத்தில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குருநகர், தொடர்மாடியைச் சேர்ந்த இராயப்பு பிரான்சிஸ் (வயது 45) தண்ணீர்தாங்கி வீதியைச் சேர்ந்த வைத்தியான் இராசேந்திரம் (வயது 55) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர்.

சவுரியான் மரியதாஸ் (வயது 37) படுகாயங்களுடன் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பவராவார். (21)

**விடுதலை**

னணித் தலைவர்கள் சிறப்புரையாற்றுகின்றனர்.

விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. பேபி சுப்பிரமணியம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கும் இவ் விழாவில் அகிலஇலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ, ஜெயராஜ் அவர்களும், கலாநிதி திரு. நா. சுப்பிரமணிய ஐயரும் பாடல்கள் பற்றிய அறிமுகவுரையை நிகழ்த்துகின்றனர். கலை, கலாசார பிரிவின் சார்பில் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. தேவர் அவர்கள் நன்றியுரை வழங்கவுள்ளார். தமிழீழத்தின் சகல கலைஞர்களையும் கலை, கலாசாரப் பிரிவினர் விழாவில் கலந்து சிறப்பிக்கும்படி வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

---

## மரண அறிவித்தல்

### திரு. B.A. பெர்னான்டோ.(J. P)

(மண்டைதீவு)

மண்டைதீவைச் சேர்ந்த இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகஸ்தரும், சமாதான நீதிவானும், திடீர்மரண விசாரணை அதிகாரியும் ஆகிய திரு. ப. அன்ரனி பெர்னான்டோ 28. 11. 90 இல், கொழும்பில் காலமானார். இவர் கண்மணியின் (அன்னம்) அன்புக்கணவரும் தர்மசீலன் (பயஸ்) (பொலிஸ் சார்ஜன்ட், கொழும்பு) அவர்களின் அருமைத் தந்தையும், கிறிஸ்தீன் (ஆசிரியை கொழும்பு) அவர்களின் அன்பு மாமனாரும், தனுஜாவின் ஆசைப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் 02. 12. 90 இன்று ஞாயிறு மாலை 4 மணிக்கு நீர் கொழும்பில் நடைபெறும்.

''செல்லம்ஸ்''
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை

தகவல்:
மனைவி உறவினர்.
(R/892)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தவறணைமீது குண்டு வீச்சு வாடிக்கையாளர் ஒருவர் பலி

(கிளிநொச்சி)

கள்ளுத் தவறணையில் கூட்டமாக நின்ற பாவனையாளர் மீது சிறிலங்கா விமானப்படையினரின் குண்டுவீச்சு விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டதில் ஒருவர் கொல்லப்பட்டார், நால்வர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளில் குண்டுவீச்சு விமானங்கள் விமானத்தாக்குதலை மேற்கொண்டன. இத்தாக்குதலில் இப்பகுதியில் உள்ள கள்ளுத் தவறணையொன்றில் நின்ற இராமநாதபுரத்தைச் சேர்ந்த சண்முகம (65) என்பவர் கொல்லப்பட்டார்.

பரமநாதன் (36) இராமநாதபுரம், விஜயரட்ணம் 6ஆம் யூனிற் வட்டக்கச்சி, கணபதிப்பிள்ளை (68) 7ஆம் யூனிற் கல்மடுநகர், தியாகராஜா (35) வட்டக்கச்சி ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (மு 35

### தென்னிலங்கை அரசியல்வாதிகள்

# போரின் நிலை தெரிந்தும் வெளியிட மறுக்கின்றனர்

(லண்டன்)

மாங்குளம் இராணுவ முகாம்மீது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் வெற்றியானது தென்னிலங்கை பகுதியில் பலத்த அரசியல் நெருக்கடிகளை தோற்றுவித்திருக்கிறது என பி. பி. சி. நேற்றுசெய்தி விமர்சனத்தில் தெரிவித்தது.

விடுதலைப் புலிகளுடனான போரில் இராணுவ ரீதியாக வெற்றியீட்டுவதன் சாத்தியப்பாட்டை கேள்விக்கு உள்ளாக்கி இருக்கின்றது. அரசியல்வாதிகள் இப்போரில் வெற்றி பெறுவது சாத்தியமாகாது என உணர்ந்துள்ள போதிலும் அதனை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளத் தயங்குகின்றனர் எனவும் பி. பி. சி. தெரிவித்தது. மேலும் சிறிமாவோ பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் விடுத்த அறிக்கையானது அவர் வடக்கு, கிழக்கின் உண்மை நிலையை உணர்ந்துகொள்ளவில்லை என்பதையே காட்டுவதாகவும் பி. பி. சி. குறிப்பிட்டது.

# விஜயலட்சுமி பண்டிட் நேற்றுக் காலமானார்

இந்தியாவின் முதுபெரும் ராஜதந்திரி விஜயலட்சுமி பண்டிட் நேற்றுக்காலை டேராடூனில் காலமானார். இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் சகோதரியாகிய இவருக்கு 90 வயது ஆகும்.

இந்தியாவின் ஐ. நா. பேரவையின் தலைமைப் பொறுப் பேற்றமுதல்பெண்மணி இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் பல்கலைக்கழகங்களிலும் வேறு நாடுகளின் பல்கலைக்கழகங்களிலும் 21முறை டாக்டர் பட்டம் பெற்றவர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**தண்டவாளங்கள்**

சிலிப்பர்க்கட்டைகள் போன்றவற்றைப் பொதுமக்கள் தம் சொந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்துதல் தடைசெய்யப்பட்டிருக்கிறது என்றும், இந்தத் தடையினை மீறுதல் தண்டனைக்குரியதாகவே கருதப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

**ராணுவத்தால்**

பகுதியை சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைத்தனர், சுற்றிவளைப்பு 12 மணிவரை நீடித்தது. இச் சுற்றிவளைப்பில் இப் பகுதியில் இருந்து ஏற்கனவே அகதிகளாகச் சென்றோரைத் தவிர மிகுதியாக வீடுகளில் தங்கியிருந்த பொதுமக்கள் அனைவரையும் இராணுவத்தினர் கைது செய்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட பொதுமக்கள் இராணுவத்தினரால் இரண்டு பேருந்துகளில் திருமலை நகருக்குள் கொண்டு செல்லப்பட்டனர்.

ஆலங்கேணி போன்ற இடங்களில் உள்ள பொதுமக்களை சீனன்குடா இளப்பன்பேர்க் தடுப்பு முகாமில் தடுத்து வைத்திருப்பது போன்று சாம்பல்தீவில் கைதுசெய்யப்பட்ட பொதுமக்களும் தடுப்புமுகாம்களுக்குக் கொண்டுசெல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

அதேவேளை, திருமலை மாவட்டத்தில் தமிழ்ப்பொதுமக்கள் சிறியளவில் வீடுகளில் வாழ்ந்த ஒரே ஒரு கிராமம் சாம்பல்தீவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (மு)

**நேற்று**

ணம் (வயது 40) என்பவர் உட்பட மூவர் காயமடைந்தனர். இப்பகுதியில் இருந்த கே சதாசிவம், தாஸ், பரராசசேகரம் ஆகியோரின் வீடுகள் உட்பட நான்கு வீடுகள் பலத்த சேதமடைந்தன. (க, ச, 83)

### வங்கிச் சேவை

ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கியில் நாளை திங்கட்கிழமை முதல் ஒருசில குறிப்பிட்ட மட்டுப்படுத்தப்பட்ட சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

புகையிரதப் பகுதி மற்றும் சிவில் ஓய்வூதிய காரர்களுக்கு உரிய கொடுப்பனவுகள் பணமாக வழங்கப்படவுள்ளன. உள்ளூர் உண்டியல் வழங்கல், காசோலைகள், வவுச்சர்கள் வைப்பிலிடுதல் போன்ற மட்டுப்படுத்தப்பட்ட சேவைகள் நடைபெறும் என்று இவ்வங்கியின் முகாமையாளர் தெரிவித்தார். (க)

**குறுகியகாலப்**

காக ஆசிரியர்களும் மாணவர்களும் தற்போது உள்ள ஊரடங்கு அற்ற காலப்பகுதியை மிக உச்ச பயன் பெறக்கூடிய வகையில் பயன் படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (க)

**வீரதமிழ்**

போது சிப்பாய் மரணமானார். வயோதிபரும் பலத்த காயமடைந்தார். கை விரல்களை இழந்தும், தொடையிலும் காயமடைந்த இவர் அங்கிருந்து யாழ். அரசினர் போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டார். எனினும் காலதாமதமாக வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டதாலும், அதிகமான இரத்தப் பெருக்கு ஏற்பட்டதாலும் நேற்றுக் காலை இவர் மரணமடைந்தார்.

துணிச்சல் மிக்க இவ் வயோதிபரின் சடலம் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்தபோது ஆஸ்பத்திரிக்கு வந்த ஏராளமான மக்கள் அதைப் பார்வையிட்டுச் சென்றனர். (85)